# தேவனிடத்தில் விசுவாசமாய் இருந்த ஒரு குருடனை இயேசு குணப்படுத்தினார்

பின்வரும் குழந்தைகளுக்கான நடவடிக்கைகளில் எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்ளலாம்.

**ஜெபம்:** "அன்பான தேவனே, பர்திமேயுவைப் போல உம்மை நம்பவும், குணப்படுத்தி எங்கள் பாவங்களை மன்னிக்கும் உமது வல்லமையின் மேல் பலமான விசுவாசம் கொள்ளவும் எங்களுக்கு உதவுவீராக."

**மாற்கு 10:46-52** ல் விசுவாசமுள்ள ஒரு குருடனை இயேசு குணப்படுத்தியதைக் காண்க.

கதையைக் கூறுவதற்கு முன்னர், இயேசு பர்திமேயுவை எவ்வாறு குணப்படுத்தினார் என்பதை **கவனித்துக் கேட்குமாறு** பிள்ளைகளை வேண்டிக் கொள்ளுங்கள்.

கதையைக் கூறி முடித்த பின் பிள்ளைகளிடம் **கேட்க வேண்டிய கேள்விகள்.**

- இயேசு வருவதை அறிந்த பர்திமேயு என்ன செய்தான்?
- சுற்றிலும் இருந்த மக்கள் பர்திமேயுவிடம் என்ன கூறினர்?
- பர்திமேயு கூப்பிடுவதைக் கேட்டு இயேசு என்ன செய்தார்?
- பர்திமேயுவிடம் இயேசு என்ன கேட்டார்?
- பர்திமேயுவை இயேசு ஏன் குணப்படுத்தினார்?

**செயல்பாடு (activity) :** பர்திமேயுவாக நடிக்கும் சிறுவர்களின் கண்ணைக் கட்டிவிட்டு கேட்க வேண்டியது:

- இப்போது எவ்வாறு உணருகிறீர்கள்?
- மற்றவர்கள் பர்திமேயுவை சுற்றி நின்ற ஜனங்களாகக் கற்பனை செய்து கொள்ளட்டும். பர்திமேயு சத்தம் போடுவதை அடக்க எவ்வாறு கூறுவீர்கள்? (பதில்: அவர்கள் இதுபோல கூறுவார்கள்: "இயேசுவுக்கு நேரமில்லை!" "இயேசுவுக்கு உன்னைத் தெரியாது." "உன் பாவத்துக்குத் தண்டனை தான் குருட்டுத்தனம்." "நீ இயேசுவுக்கு முக்கியமானவன் அல்ல!"
- இப்படிப்பட்ட விஷயங்களைக் கூறும் மக்களுக்கு நீங்கள் என்ன பதில் சொல்லுவீர்கள்?

மாற்கு 10:46-52 லிருந்து, இயேசு பர்திமேயுவைக் குணமாக்கியதை நாடகப்படுத்துக. **பெரிய பிள்ளைகள்** நடிக்க வேண்டியவை:

- இயேசு, பர்திமேயு, கதை கூறுபவர். பர்திமேயு ஒரு பழைய கந்தைத் துணியை அணிந்து கொள்ளவும். முதலில் கண்களை மூடியவாறு அமர்ந்திருக்கவும்.
- **சிறிய பிள்ளைகள், சீஷர்கள்** மற்றும் **மக்களாக** நடிக்கலாம்.

**கதை கூறுபவர்: மாற்கு 10:46-52 ஐ வாசியுங்கள்.**

**மக்கள்** : "பாருங்க! இயேசு வருகிறார்! தேவன் வாக்குத்தத்தம் செய்த இரட்சகர்."

**பர்திமேயு:** "இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்."

**மக்கள்** : "சத்தம் போடாதே! அந்த மகாபெரிய மனிதனை தொந்தரவு செய்யாதே!"

"ஷ்...இயேசு கூறுவதைக் கேட்க வேண்டும்."

**பர்திமேயு:** "தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்"

**இயேசு** : நின்று, "அவனை இங்கே கூப்பிடுங்கள்."

**மக்கள்** : "தைரியமாயிரு! எழுந்து வா! அவர் உன்னை அழைக்கிறார்" (கையைப் பிடித்து அவனை இயேசுவிடம் அழைத்துப் போகின்றனர். பர்திமேயு தன் பழைய மேலாடையை விட்டு விடுகிறான்).

**இயேசு** : "நான் உனக்கு என்ன செய்ய விரும்புகிறாய்?"

**பர்திமேயு** : "பெரும் போதகரே, எனக்கு என் கண்பார்வை வேண்டும்."

**இயேசு** : (அவன் கண்களைத் தொட்டு), "உனது விசுவாசம் உன்னை குணப்படுத்தியது. போ!"

**கதை கூறுபவர்:** "அவன் உடனே கண் பார்வை பெற்று இயேசுவைப் பின் தொடர்ந்து சாலை வழியாகச் சென்றான்." (நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறவும்).

சபைத் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்க.

- ஆராதனை வேளையில் பெரியவர்களுக்கு நாடகத்தை நடத்திக் காட்டவும்.
- இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில் பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளைப் பெரியவர்களிடம் கேட்கவும்.
- பிள்ளைகள் தயாரித்த கவிதை உட்பட எல்லாவற்றையும் வழங்கட்டும்.

ஒரு கண்பார்வை அற்றவரின் படத்தை வரைக (தலை மட்டும் வரைந்தால் நன்றாக இல்லை என்றால், ஒரு முழு மனிதனின் படத்தை வரைக).

- **பெரிய பிள்ளைகள்** சிறுவர்களுக்கு உதவட்டும்.
- கண் மூடி இருக்கும் நிலையில் ஒரு முகத்தை வரைந்து, இயேசுவிடம் நமக்கு விசுவாசம் இல்லை என்றால் நமது வாழ்க்கை இவ்வாறே இருக்கும் என்று விளக்குக.
- தாங்கள் வரைந்த படத்தைப் பெரியவர்களுக்குக் காட்டி அர்த்தத்தை விளக்கவும்.

**சங்கீதம்:** ஏசாயா 53: 4 & 5 ஐ இரண்டு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.



மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு சிறுமைப் பட்டவர் என்று எண்ணினோம்.

நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயம்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

இயேசு இன்று மக்களை எவ்வாறு குணமாக்குகிறார் என்பதைக் காட்டும், தாங்கள் கண்ட ஒரு உதாரணத்தைப் **பெரிய பிள்ளைகள்** கவிதையாகவோ, பாடலாகவோ, சிறுகதையாகவோ எழுதலாம்.

**மனப்பாடம்:** லூக்கா 11:9.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, நீர் கூறுவதைக் கேட்கும் படியாக நீர் எங்கள் ஆவிக்குரிய கண்களையும் காதுகளையும் திறந்ததற்காக நன்றி. எங்கள் பாவத்திலிருந்து எங்களை இரட்சித்து குணமாக்க நீர் வல்லவராதலால் நாங்கள் உம்மைத் துதிக்கிறோம். பர்திமேயு செய்ததைப் போல உம்மேல் விசுவாசம் கொண்டு உம்மை நோக்கி கூப்பிட்டுக் கொண்டே இருப்பதற்கு எங்களுக்கு உதவி செய்வீராக."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net